செ.வெ.எண்: 322 நாள்: 10.07.2017

# செய்தி வெளியீடு

இராணுவப் பணியில் தங்களது குழந்தைகளை சேர்த்து பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு முன்னாள் படைவீரர் நலத்துறை மூலம் தொகுப்பு மானியம் வழங்கப்படுகிறது. 01.04.2015 முதல் துவங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 31.03.2017 வரை 15 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. மாநிலத்தில் சுமார் 1.80 லட்சம் முன்னாள் படைவீரர்களின் குடும்பங்கள் உள்ள நிலையில் 2015-2016 மற்றும் 2016-2017 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வெறும் 15 நபர்கள் மட்டுமே இராணுவ பணியில் சேர்ந்துள்ளதாக கண்டறியப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. எனவே இராணுவப் பணியில் தங்களது குழந்தைகளை சேர்த்து பயிற்சி பெற்றுக் கொண்டு இருப்பின் இத்திட்டத்தின் கீழ் தொகுப்பு மானியம் பெற்று பயன்பெறுமாறும் மேலும் விவரம் அறிய காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகுமாறும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
காஞ்சிபுரம்.